அலகு 4

# பாதுகாப்பு



## கற்றல் நோக்கங்கள்

- விபத்துகளை தவிர்ப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்ளல்.
- தீயிலிருந்து பாதுகாக்கும் முறைப்பற்றி அறிந்துகொள்ளல்.
- சாலைப்பாதுகாப்பு குறித்துத் தெரிந்துகொள்ளல்.
- நீர் பாதுகாப்பு குறித்துப் புரிந்துகொள்ளல்.
- மின்சாரப் பாதுகாப்பு குறித்து அறிந்துகொள்ளல்.




7HWUVY

நமது வாழ்க்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வீடு, பள்ளி, சாலை மற்றும் இதர இடங்களில் விபத்துகள் நடைபெறக்கூடும். நாம் முன்னெச்சரிக்கையாக இருந்தால் விபத்துகளைத் தவிர்க்கலாம். பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொண்டு அவற்றைப் பின்பற்றினால் பாதுகாப்பாக வாழலாம்.

## விபத்திற்கானக் காரணங்கள்

**விபத்திற்கானக் காரணங்கள்**

- அவசரம்
- கவனக்குறைவு
- விழிப்புணர்வு இன்மை
- வெறுப்பு
- விதிகளை மீறுதல்
- முறையான பயிற்சி இன்மை
- பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாது இருத்தல்

நம் வாழ்க்கையில் விபத்துகள் **தீ, நீர், வாகனங்கள், மின்சாரம், விஷப்பூச்சிகள், கூர்மையான ஆயுதங்கள்** மற்றும் **கண்ணாடி பொருள்கள்** போன்றவற்றின் மூலம் ஏற்படலாம்.

DG8A8W



தீ



நீர்



மின்சாரம்



வாகனங்கள்



விஷப்பூச்சிகள்



பூச்சிக் கொல்லிகள்



கூர்மையான ஆயுதங்கள் மற்றும் கண்ணாடி பொருள்கள்



3rd_Social_Science_Unit_4.indd 159 2/19/2020 8:18:19 PM

# தீ பாதுகாப்பு

**தீ என்பது மனிதனின் அற்புத படைப்பு**

❖ தீயினால் பொருள்களை உருவாக்கவும், அழிக்கவும் முடியும்.


❖ தீ நம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் பயன்படுகிறது. நாம் அதை கவனமாக கையாளவேண்டும்.

## தீ விபத்திற்கான காரணங்கள்

கீழ்க்காணும் வழிகளில் **தீ விபத்து** நேரலாம்.



வெடிப்பொருள்கள்



குறைந்த மின்னழுத்தம்



எரிவாயு கசிவு




எளிதில் தீப்பிடிக்கக் கூடியப் பொருள்கள்




**காட்டுத் தீ** எவ்வாறு உருவாகிறது? ?

### தீ விபத்திற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

1. எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பொருள்களைக் கவனமாக கையாளவேண்டும்.
2. சமையல் செய்பவர் பருத்தி ஆடைகளை அணியவேண்டும்.
3. சமைத்தப்பின் எரிவாயு உருளை அடைப்பானை மூடிவிடவேண்டும். எரிவாயு உருளைகளில் கசிவு இருப்பதைக் கண்டறிந்தால், உடனே வீட்டை காற்றோட்டப்படுத்த கதவுகளையும், சன்னல்களையும் திறக்க வேண்டும்.
4. நெருப்புடன் விளையாடக்கூடாது.
5. நாம் வெடி வெடிக்கும்பொழுது, பெரியவர்களுடன் சேர்ந்து கவனமாக வெடிக்கவேண்டும்.



3rd_Social_Science_Unit_4.indd 160 2/19/2020 8:18:25 PM




## தீ விபத்தின்பொழுது என்ன செய்யவேண்டும்?

1. தீ அணைப்பானைப் பயன்படுத்தவேண்டும்.
2. கட்டடத்தில் உள்ள எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்யவேண்டும்.
3. புகை பரவும்பொழுது மூக்கு மற்றும் வாயை ஈரத்துணியால் மூடிக் கொள்ள வேண்டும்.
4. எவர் உடம்பிலாவது தீப்பற்றினால் சணல் பைகளைக் கொண்டு தீயை அணைக்கவேண்டும். தீக்காயம் அடைந்தவரை காற்றோட்டமான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

**உனது உடையில் தீப்பற்றினால்,**

- ஓடக்கூடாது.
- ஓடினால் எளிதில் தீ பரவும்.
- கீழே படுத்துப் புரளவேண்டும்.



நாம் அறிந்து கொள்வோம்.

தீ விபத்து நடந்தால் 101 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவேண்டும்

## நீ என்ன செய்யக்கூடாது ?

உன் தோலில் தீக்காயம் இருந்தால்,

- மை அல்லது காபி தூளை தீக்காயத்தில் வைக்கக் கூடாது.
- தீப் புண்ணை ஊசிக்கொண்டு குத்தக்கூடாது. அவ்வாறு குத்தினால் அது பாதிப்பை உண்டாக்கும்.

**செயல்பாடு**
நாம் எழுதுவோம்

**தீ நம் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு உதவுகிறது?**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________



3rd_Social_Science_Unit_4.indd 161 2/19/2020 8:18:27 PM

# நீர் பாதுகாப்பு

**நீர் நமது வாழ்வின் திரவ அமுதம் (Elixir) ஆகும்**



நம் வாழ்வில் நீர் மிகவும் முக்கியமானது.

ஏரி, ஆறு, நீர்வீழ்ச்சி, கடல் மற்றும் குளம் போன்றவற்றில் நாம் விதிமுறைகளை மீறி குளித்தால் விபத்துகள் நேரும்.



ஆறு அல்லது ஏரியில் நீ குளித்திருக்கிறாயா? ஆம் என்றால், யாருடன் சென்று குளித்தாய்?

**நாம் அறிந்து கொள்வோம்.**

**குளம் அல்லது ஆற்றில் குளிப்பதற்கு நாம் பெரியவர்களுடன் செல்லவேண்டும். நீச்சல் தெரிந்தால் மட்டுமே அங்குச் சென்று குளிக்கவேண்டும்.**

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

1. தனியாக நீர்நிலைகளுக்கு குளிக்கச் செல்லக்கூடாது.



2. தேங்கியுள்ள குளத்தில் இறங்கக்கூடாது.




3. நீர்நிலைகளில் உள்ள அபாய எல்லைக்குச் செல்லக்கூடாது.



4. கிணற்றை எட்டிப்பார்க்கக் கூடாது. கிணறு ஆழமாக இருக்கக்கூடும்.



5. நீரில் பயணம் செய்யும்பொழுது பாதுகாப்பு கவசத்தை அணிய வேண்டும்.

# மின்சாரப் பாதுகாப்பு

மின்சாரம் நமது வாழ்வின் முக்கிய தேவையாகி விட்டது. மின்சாரம் இன்றி எந்தப் பொருளும் இயங்காது என்ற நிலைக்கு காலம் நம்மை மாற்றிவிட்டது. வீடுகள், தொழிற்சாலைகள், மற்றும் இதர இடங்களில் மின்சாரம் பயன்படுகிறது. கவனக்குறைவாக கையாண்டால் மின்விபத்து ஏற்படும்.



## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:







1. மின்பொத்தான்களையும், மின்கம்பிகளையும் ஈரமான கையால் தொடக்கூடாது.
2. சலவைப்பெட்டி மற்றும் இதர மின்சாதனங்களை மின் இணைப்பில் இருக்கும்பொழுது தொடக்கூடாது.
3. மின்மாற்றி மற்றும் மின்கோபுரங்கள் அருகில் விளையாடக்கூடாது.
4. மின்கம்பத்தின் மேலே ஏறக்கூடாது.
5. மின்பொத்தான் பெட்டியில் குச்சி போன்ற பொருள்களை நுழைக்கக்கூடாது.
6. மின்கம்பிகள் மற்றும் மின்கம்பங்கள் அருகில் விளையாடக் கூடாது.

**செயல்பாடு**
நாம் எழுதுவோம்

**உனது வீட்டில் பயன்படுத்தப்படும் மின்சாதனங்களைப் பட்டியலிடுக:**

______________________________

______________________________

______________________________

**நாம் அறிந்து கொள்வோம்.**

குறைந்த மின்னழுத்தத்தால் விபத்து நேரும் பொழுது தண்ணீர்க் கொண்டு தீயை அணைக்கக்கூடாது.



3rd_Social_Science_Unit_4.indd 163 2/19/2020 8:18:34 PM

# சாலைப் பாதுகாப்பு

சாலையில் நாம் கவனமாக நடக்கவேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. கவனக்குறைவினால் அதிக விபத்துகள் நேரிடுகிறது.



## சாலைப் போக்குவரத்து விளக்கு (Traffic signal)



| | |
|---|---|
| சிவப்பு | நில் |
| மஞ்சள் | கவனி |
| பச்சை | செல் |

**விபத்துகளைத் தவிர்க்க,**

- சாலை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.
- சாலைப் போக்குவரத்துக் குறியீடுகளை நாம் பின்பற்ற வேண்டும்.
- சாலையில் வேகமாக செல்லக்கூடாது.
- காரில் (மகிழுந்து) பயணம் செய்யும்போது, இருக்கைப்பட்டையை அணியவேண்டும்.
- இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது, தலைக்கவசம் அணியவேண்டும்.

### சாலையில் செல்லும்பொழுது

- நடைபாதையில் நடக்கவேண்டும்.
- சாலையில் விளையாடக்கூடாது.
- சாலை விளக்கில் இருந்து வரும் வண்ணத்தை நாம் கவனித்து சாலையைக் கடக்கவேண்டும்.

## பாதசாரிகளுக்கான சாலைக்குறியீடுகள் (Traffic Signs)



| | |
|---|---|
| சிவப்பு | நில் |
| பச்சை | செல் |

### சிந்தனை செய்



1. நீ இச்சாலைக் குறியீடுகளைக் கவனித்திருக்கிறாயா?
2. நீ எங்குப் பார்த்திருக்கிறாய்?

**நாம் அறிந்து கொள்வோம்.**

**சாலைப் போக்குவரத்து விளக்கு (Traffic signal)** இல்லாத இடத்தில் நாம் முதலில் வலப்பக்கம் திரும்பி, பிறகு இடப்பக்கம் திரும்பி, பிறகு வலப்பக்கம் பார்த்து கடக்க வேண்டும்




3rd_Social_Science_Unit_4.indd 165 2/19/2020 8:18:52 PM

## பாதசாரிகள் கடக்கும் இடம்

பாதசாரிகள் கடக்கும் இடத்தில் மட்டுமே பாதசாரிகள் கடக்கவேண்டும்.

பாதசாரிகள் கடக்கும் இடம் **வரிக்குதிரைப்போன்று** கருப்பு மற்றும் வெள்ளைக்கோடுகளுடன் காணப்படும்.



**செயல்பாடு**
நாம் எழுதுவோம்

**விழிப்புணர்வு குறித்த வாசகங்களை எழுதுக.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



3rd_Social_Science_Unit_4.indd 166 2/19/2020 8:18:54 PM

## போக்குவரத்துப் பூங்கா

போக்குவரத்துப் பூங்காவில் சாலைவிதிகளை நாம் கற்றுக்கொள்ளலாம். பள்ளிக் குழந்தைகள் மத்தியில், போக்குவரத்துப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவது இப்பூங்காவின் நோக்கங்களில் (Intention) ஒன்றாகும். இப்பூங்கா சாலையைப் பற்றிய விழிப்புணர்வை (Awareness) நமக்கு அளிக்கும்.



**சென்னையில்** அண்ணா சதுக்கம் அருகில் **போக்குவரத்துப் பூங்கா** உள்ளது.



தலைக்கவசம் அணிவோம்.
உயிரைக் காப்போம்.



நாம் **போக்குவரத்து விதிகளைப்** பின்பற்றுவோம்!



3rd_Social_Science_Unit_4.indd 167 2/19/2020 8:18:54 PM

## பூச்சிக்கொல்லி மருந்துகளிடமிருந்து பாதுகாப்பு

நமது வீட்டில் **பூச்சிக்கொல்லி மருந்துகளை,** பூச்சிகளைக் கொல்ல பயன்படுத்துகிறோம். அந்த மருந்துகள் மிகவும் அபாயகரமானது. அவற்றை நாம் தொடக்கூடாது.



பூச்சிக்கொல்லிகள்

### விஷப்பூச்சிகளால் உண்டாகும் அபாயங்கள்

**அறிகுறிகள்:**

- தோலில் அரிப்பு மற்றும் சிவப்பு நிறத்தை ஏற்படுத்தும்.
- வீக்கத்தை ஏற்படுத்தும். (கண் இமை, காது, வாய் போன்ற இடங்களில் வீக்கத்தை உருவாக்கும்.)
- தலைவலி, மயக்கம் மற்றும் வாந்தியை ஏற்படுத்தும்.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் முதலுதவி அளித்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டும்.**



பாம்பு



தேள்



சிலந்தி

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- புதருக்கு அருகே செல்லக்கூடாது.
- வீடு மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.



குளவி

நாம் அறிந்து கொள்வோம்.

வயலில் வேலை செய்பவர்கள் நல்லெண்ணெய், பாரபின் எண்ணெய்யைத் தேய்த்துக்கொண்டு வேலை செய்வார்கள். அதனால் பூச்சிகள் அவர்களை கடிக்காது.



3rd_Social_Science_Unit_4.indd 168 2/19/2020 8:18:57 PM

## கூர்மையான ஆயுதம் மற்றும் கண்ணாடிப்பொருள்கள்

- கூர்மையான ஆயுதம் மற்றும் கண்ணாடிப்பொருள்களைக் கவனமாகக் கையாளவேண்டும்.
- ஏனெனில் அது காயங்களை ஏற்படுத்தும்.





### கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| திரவ அமுதம் | : | Elixir |
| நோக்கம் | : | Intention |
| விலைமதிப்பற்றது | : | Precious |



## மீள்பார்வை

- நமது உயிர் விலைமதிப்பற்றது (Precious). நாம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்றால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும்.
- நாம் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.



3rd_Social_Science_Unit_4.indd 169 2/19/2020 8:18:58 PM



## மதிப்பீடு



**I. கீழ்க்காணும் விடைகளிலிருந்து சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(நீர், பாம்பு, சாலைப் போக்குவரத்து விளக்கு, மின்சாரம், தீ)**

1. தொட்டால், அது சுடும்.

   விட்டால், அது எரியும். அது என்ன? --------

2. நான் அன்றாடம் பயன்படுத்துவேன்.

   அதனை மழைநேரங்களில் காண்பேன். அது என்ன?--------

3. கம்பிகளின் வழியே செல்வேன். ஆனால் நான் கொடி அல்ல.

   நான் விளக்குகள் எரிய உதவுவேன். நான் யார்?--------

4. அவன் கால்கள் இல்லாமல், காடுகளில் உலாவுவான்.
   அவன் யார்? --------

5. சாலையில் நின்று நம்மை வழி நடத்துவான். அவனுக்கு மூன்று கண்கள் உண்டு. அவன் யார்? --------

**II. சரியா? தவறா என்று எழுதுக.**

1. நாம் சமையல் அறையில் விளையாடக்கூடாது. (          )
2. ஆற்றில் ஆழமான பகுதிக்குச் செல்லலாம். (          )
3. நாம் மின்சாதனங்களை ஈரமானக் கையால் தொடக்கூடாது. (          )
4. நாம் நமது வீட்டையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். (          )
5. நாம் கண்ணாடிப் பொருள்களை வைத்து விளையாடலாம். (          )

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. விபத்து நேர்வதற்கான காரணங்கள் சிலவற்றை எழுதுக.
2. நமது உடையில் தீப்பற்றினால் நாம் என்ன செய்யவேண்டும்?



3rd_Social_Science_Unit_4.indd 170 2/19/2020 8:19:01 PM


3. நாம் மின்விபத்திலிருந்து எவ்வாறு நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்?

4. நாம் எங்குச் சாலையைக் கடக்க வேண்டும்?

5. சில விஷப்பூச்சிகளின் பெயர்களைக் குறிப்பிடுக

## IV – வண்ணம் தீட்டுவோம்

சாலைப் போக்குவரத்து விளக்கு (Traffic Signal)




## செயல்பாடு

## செயல் திட்டம்

JEIPKU

**நீ தீபாவளி அன்று பட்டாசு வெடித்த அனுபவத்தைப் பற்றி எழுதுக.**



___________________________________

___________________________________

___________________________________

___________________________________

___________________________________

___________________________________

# வகுப்பு III கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் (பருவம் 1, தொகுதி 2) பாடநூல் மேலாய்வாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்

### கல்வி ஆலோசகர்
**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடதிட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 06.

### பாடநூல் ஒருங்கிணைப்பாளர்கள்
**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பலூர், அரியலூர் மாவட்டம்.

**கே. ரேவதி**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
பெரம்பலூர்.

### பாட ஒருங்கிணைப்பாளர்
#### கணிதம்
**பி. மலர்விழி**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
பாடியநல்லூர், திருவள்ளூர்.

#### அறிவியல்
**தெ. அசோக்**
முதுநிலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்
பள்ளி, பொன்னேரி, திருவள்ளூர்
மாவட்டம்.

#### சமூக அறிவியல்
**சா. மகேஸ்வரி**
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

### கலை மற்றும் வடிவமைப்பு குழு

#### பக்க வடிவமைப்பு
ராஜேஷ் தங்கப்பன்
சந்தியாகு ஸ்டீபன்
ஜான் ஸ்மித்
பிரசாந்த். சி
யோகேஷ்
ஏசு ரத்தினம் / பக்கிரி
அடிசன் ராஜ். அ / கோபிநாத்
பொற்செல்வன் / ந. ர. யுவராஜ்
வினோத் குமார் வி

#### In-House – QC
காமாட்சி பாலன் ஆறுமுகம்
கி. ஜெரால்டு வில்சன்
அருண் காமராஜ்

#### அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

#### ஒருங்கிணைப்பு
ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### மேலாய்வாளர்கள்
**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி, சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்
**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**சி. வெங்கடேசன்**
இடைநிலை ஆசிரியர்,
அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்ப
பள்ளி, வண்டராயன் கட்டளை,
அரியலூர்.

**கே. புஸ்பராஜ்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
நரசிங்கம் பாளையம், அரியலூர்.

**எஸ். கே.சிவகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
எடையூர், அரியலூர்.

**சி. தொட்டியாதன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,
நமன்குணம், அரியலூர்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு
**இரா. ஜெகநாதன்,**
இடைநிலைஆசிரியர்,
ஊ.ஒ.ந.பள்ளி, போளூர்,
திருவண்ணாமலை.

**வ. பத்மாவதி,** பட்டதாரிஆசிரியர்,
அ.உ.பள்ளி, திருமானூர்,
அரியலூர்.

**சூ. ஆல்பர்ட் வளவன் பாபு,**
பட்டதாரிஆசிரியர்
அ.உ.பள்ளி, பரமக்குடி,
இராமநாதபுரம்.

## அறிவியல்

### மேலாய்வாளர்கள்
**ஏஞ்சலின் ரூபி**
உதவி பேராசிரியை,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

**முனைவர் க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பெரியார் நகர்,
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### பாட நூலாசிரியர்கள்
**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

**ஹெலன் எட்வர்டு**
விரிவுரையாளர் மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
திருச்சி.

**எம். மரியதாஸ்**
தலைமையாசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
பலிங்கநாதம், திருமனூர்,
அரியலூர்.

**ந. கோபி**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
நெமிலி ஒன்றியம், வேலூர்.

**கே. கணேசன்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வெள்ளை பிச்சாம்பட்டி, திருச்சி.

**ஆர். சுவாமிநாதன்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
கரு–சேனாபதி, அரியலூர்.

**பி. வசந்தகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
ஒத்தைபுளிகுடியிருப்பு,
புதுக்கோட்டை.

**கே. செல்வமணிகண்டன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
கருக்கை, கடலூர்.

**கே. நிர்மலா மேரி**
இடைநிலை ஆசிரியை, ஊராட்சி
ஒன்றிய துவக்க பள்ளி, ஆரூர்,
சங்கராபுரம், விழுப்புரம்.

**எஸ். ஜானகி**
இடைநிலை ஆசிரியை,
கோபால விலாஷ் அரசு நிதி உதவி
பள்ளி, புதுசத்திரம், தஞ்சாவூர்.

## சமூக அறிவியல்

### மேலாய்வாளர்கள்
**க வேலு,** பட்டதாரி ஆசிரியர்,
அ. ம. மே. நி. பள்ளி, தலைவாசல்,
சேலம் மாவட்டம்.

**சு. கோமதி மாணிக்கம்,**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

### பாட நூலாசிரியர்கள்
**எல். மாரிமுத்து**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
அரியலூர்.

**எஸ். அபிராமி**
இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
முத்துவாஞ்சேரி, அரியலூர்.

**கே. மதிமன்னன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,
பள்ளிசேரை, விழுப்புரம்.

**ஆர். ஜோஸ்வின் இமாக்குலேட்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பளிங்காநத்தம்,
அரியலூர்.

**ஜி. கண்ணாம்பாள்**
பட்டதாரி ஆசிரியை, அரசு உயர்
நிலைப் பள்ளி, சீலக்குடி,
பெரம்பலூர்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



3rd_Social_Science_Unit_4.indd 172 2/19/2020 8:19:02 PM